ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1851/1 - 2014 පෙබරවාරි මස 24 වැනි සඳුදා - 2014.02.24

*1851/1 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 49.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

*10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை*

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 10 (1) (அ) இனால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் செயற்படுத்துவதன் மூலம் இப்பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையுடன் இணங்கியொழுகுதவற்கு இதனகத்து குறித்துரைக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் சகல உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் , வியாபாரிகள், இறக்குமதியாளர்கள் ஆகியோருக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இத்தால் பணிப்புரை விடுக்கின்றது:-

(1) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு இலச்சினை இத்தகைய உற்பத்திப் பொருட்களின் ஒவ்வொரு பொதி, கொள்கலன் அல்லது பொதியிடும் உறையின் மீதும் ஒட்டப்பட்டிருந்தாலேயொழிய அத்தகைய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யவோ, இறக்குமதி செய்யவோ, விநியோகம் செய்யவோ, கொண்டு செல்லவோ, களஞ்சியப்படுத்தவோ, மொத்தமாகவோ அல்லது சில்லறையாக விற்பனை செய்யவோ, விற்பனைக்கு வழங்கவோ அல்லது வியாபாரம் செய்யவோ கூடாது.

(2) வியாபாரிகள் மற்றும்/ அல்லது பாவனையாளர்களின் விநியோகத்திற்கென இத்தகைய உற்பத்திப் பொட்களை விடுவிப்பதற்கு முன்னர், இத்தகைய உற்பத்திப் பொருட்களின் ஒவ்வொரு பொதி, கொள்கலன் அல்லது பொதியிடும் உறையின் மீதும் பாதுகாப்பு இலச்சினைகள் ஒட்டப்பட்டிருப்பதை உற்பத்திப் பொருட்களின் ஒவ்வொரு உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் உறுதி செய்ய வேண்டும்.

(3) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களின் முறைமையை நடைமுறைப்படுத்துவற்கு அவசியமான தன்னியக்க உபகரணம் அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநரினால் மாத்திரமே உற்பத்தியாளர்களின் தொழிற்சாலைகளில் நிறுவப்பட வேண்டும். தன்னியக்க உபகரணத்தின் நிறுவுகை தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநரினால் வேண்டற்பாலதான மாற்றங்கள் (திரிபுகள்) உட்கட்டமைப்பு மற்றும் ஏணைய வசதிகள் ஆகியவற்றை அத்தகைய உற்பத்தியாளர்கள் வழங்க வேண்டும். சாதாரண வேலை மற்றும் பராமரிப்பு வேளைகளின் போதான அதன்

---



**கவனிக்க.**- 1850/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல.1850/ 55 ஆகும்.

2- PG 1982

உற்பத்தி வசதிகள் அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநரைச் சென்றடைவதற்கும் உற்பத்தியாளர்கள் அனுமதி வழங்க வேண்டும்.

(4) அத்தகைய உற்பத்திப் பொருட்களை இலங்கைச் சந்தையில் விடுவிப்பதற்கு முன் வெளிநாட்டு உற்பத்தியாளர்களினால் வெளிநாட்டில் அல்லது இறக்குமதியாளரினால் சுங்க களஞ்சியசாலையில் அத்தகைய ஒவ்வொரு பொதி, கொள்கலன் அல்லது பொதியிடும் உறையின் மீது பாதுகாப்பு இலச்சினைகள் ஒட்டப்படுவதை உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(5) உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் தேவையான அளவு பாதுகாப்பு இலட்சினைகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவர்கள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பெற்ற இணையத்தளத்தின் மூலமாக ஒவ்வொரு பொதி, கொள்கலன் அல்லது பொதியிடும் உறையின் மீது பாதுகாப்பு இலச்சினை ஒட்டப்படுவதை பிரகடனப்படுத்தவும் வேண்டும்.

(6) இதனகத்து உற்பத்திப் பொருட்களின் ஒவ்வொரு பொதி, கொள்கலன் அல்லது பொதியிடும் உறையின் மீது ஒட்டப்படுவதற்கான பாதுகாப்பு இலச்சினைகளைப் பெற்றுக்கொள்வதற்கென உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்களினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை பின்வருமாறு அமைய வேண்டும் :-

(அ) ஒவ்வொரு காலாண்டினதும் கருமமாற்றும் ஒவ்வொரு முதலாவது தினத்தில், உற்பத்திப் பொருளின் வகையை வரையறுத்து, குறித்த காலப்பகுதிக்குத் தேவையான பாதுகாப்பு இலச்சினைகளின் எண்ணிக்கை தொடர்பான 12 மாத பாதுகாப்பு இலச்சினைக்கான கேள்வி பற்றிய எதிர்வு கூறுகையை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு உற்பத்தியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் வழங்க வேண்டும் ;

(ஆ) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் பேணப்படும் மத்திய தரவுத்தளத்துடன் இணையப்பெற்றுள்ள பாதுகாப்பானதொரு இணையத்தள இடைமுகத்தை உபயோகித்து பாதுகாப்பு இலச்சினைகளுக்கான கட்டளைகளை உற்பத்தியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் அனுப்பிவைக்க வேண்டும் ;

(இ) 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பணிப்புரைகள் அல்லது கட்டளைகளைக் கடைப்பிடித்து (பின்பற்றி) இணங்கியொழுகுவதில் அத்தகைய உற்பத்தியாளர் மற்றும்/அல்லது இறக்குமதியாளர் சட்டத்தை மீறியிருந்தால் அல்லது இணங்கியொழுகியிருக்காவிட்டால், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதன் தற்றுணிபின் பேரில், உற்பத்தியாளர்கள் மற்றும்/ அல்லது இறக்குமதியாளர்கள் ஆகியோரால் அனுப்பிவைக்கப்பட்ட ஏதேனும் கட்டளைகளை நிராகரிக்க வேண்டும் ;

(ஈ) அதிகாரசபை மற்றும் அதன் சார்பில் பாதுகாப்பு இலச்சினைகளை மேம்படுத்தி விநியோகம் செய்வது தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநரினால் வழங்கப்படும் சேவைகளுக்காக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணமொன்றை ஒவ்வொரு பாதுகாப்பு இலச்சினைக்கென உற்பத்தியாளர்களால் அல்லது இறக்குமதியாளர்களால் செலுத்தப்பட வேண்டும் ;

(உ) உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளரினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கட்டளையொன்றின் மீதான அதிகாரசபையின் அங்கீகாரத்தின் பேரில் அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநர் கட்டளைக்கான அங்கீகாரத்தின் பின்னர் 3 கரும நாட்களுக்கு (வேலை நாட்களுக்கு) மேற்படாமல் மேற்படி (ஈ) இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களுக்கான விலைப்பட்டியலை உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளருக்கு வழங்க வேண்டும் ;

(ஊ) அத்தகைய விலைப்பட்டியல் முழுமையாகச் செலுத்தித்தீர்க்கப்பட்டதன் பேரில், கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான பாதுகாப்பு இலச்சினைகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்குத் தயாராக உள்ளதென அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநரால் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் எவரேனும் ஒருவருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அவ்வாறான சூழ்நிலையில், அதனகத்துப் பின்னர், பாதுகாப்பு இலச்சினைகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(7) இந்த பணிப்புரையின் பயன்பாட்டிற்காக -

(i) "உற்பத்திப் பொருட்கள்" என்பதனால் இதன் அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டுள்ளவை என்பது கருதப்படும்.

(ii) "அங்கீகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநர்" என்பது இந்தப் பணிப்புரைக்கு இசைவாக அதிகாரசபை மற்றும் அதன் சார்பில் உற்பத்தியாளர்களுக்காக அல்லது வர்த்தகர்களுக்காக பாதுகாப்பு இலச்சினைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வன்பொருள், மென்பொருள் ஆகியவற்றை மேம்படுத்தி வழங்குவதற்கென அதிகாரசபையினால் எழுத்து மூலமாக அங்கீகாரமளிக்கப்பட்ட (அதிகாரமளிக்கப்பட்ட) ஏதேனும் சேவை வழங்குநர் என்று பொருளாகும்.

(iii) "வெளிநாட்டு உற்பத்தியாளர்/ஏற்றுமதியாளர்" என்பது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் சம்பந்தமாக இலங்கைக்கு வெளியே இருக்கின்ற உற்பத்தியாளர் அல்லது ஏற்றுமதி செய்பவர் என்று பொருளாகும்.

(iv) "இறக்குமதியாளர்" என்பது, 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் வரைவிலக்கணத்தில், எவரொருவர் விற்பனை அல்லது விநியோகம் செய்யும் நோக்கத்திற்காக உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்யும் வியாபாரி என்று பொருளாகும்.

(v) "காலாண்டு" என்பது, பஞ்சாங்க ஆண்டின் முறையே சனவரி முதல் திகதி, ஏப்பிறல் முதல் திகதி, யூலை முதல் திகதி மற்றும் ஒற்றோபர் முதல் திகதி ஆகியவற்றில் ஆரம்பிக்கும் யாதாயினும் மூன்று மாத காலப்பகுதி என பொருளாகும்.

இந்தப் பணிப்புரை 2014, ஓகத்து 1 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும்.

**அட்டவணை**

இந்தப் பணிப்புரையின் பிரகாரம் பாதுகாப்பு இலச்சினைகள் ஒட்டப்பட்டிருக்க வேண்டிய உற்பத்திப் பொருட்கள் :-

(1) மென் பானம் ;
(2) போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் ;
(3) தரமான சமையல் எண்ணெய் ;
(4) பற்பசை ;
(5) எல்லாவகையான சவர்க்காரங்கள் ;
(6) ஷம்போ ;
(7) வர்ணப்பூச்சு ;
(8) மின் ஆளிகள், பொருத்துதற்கான குழி (Socket), மின் கற்றோட்ட இடைவெளிகள் (Circuit Breakers).

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூபி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2014, பெப்புருவரி 24.

3 - 250